**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**07 ஆகஸ்ட் 2015 / 22 ஷவ்வால் 1436**

# முன்னேற்றத்துக்காக முஸ்லிம்கள் ஆற்ற வேண்டிய பங்குகள்

الْحَمْدُ لِلَّهِ الْمَلِكِ الْحَقِّ الْمُبِيْنِ الَّذِي أَبَانَ لِعِبَادِهِ مِنْ آيَاتِهِ مَا
بِهِ عِبْرَةً لِلْمُعْتَبِرِيْنَ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ
لَهُ إِلَهَ الأَوَّلِيْنَ وَالآخِرِيْنَ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ
وَرَسُوْلُهُ الْمَبْعُوثُ رَحْمَةً لِلْعَالَمِيْنَ. اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيمًا كَثِيْرًا . أَمَّا بَعْدُ فَيَا
عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

”ஈமான்” (இறை நம்பிக்கை) மற்றும் அமைதி எனும் அருட்கொடைகளை நமக்கு வழங்கியுள்ள அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” எனும் பக்தியைப் பாதுகாப்பதற்கு நம்மால் முடிந்த அளவு சிறப்பாக முயல்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா

”தக்வா” வின் பொருட்டால் நமது வாழ்வில் அதிகமான பரக்கத்துகளையும் (அபிவிருத்திகள்) மன அமைதியையும் வழங்குவான்.

ஜமாஅத்தார்களே!

கடந்த சில வாரங்களில், இந்நவீன உலகில் காணப்படும் பல்வேறு விதமான சவால்களை எதிர்கொள்வதில் அதிக நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற, அதே சமயம், நமது வாழ்வில் அமைதியுணர்வை ஏற்படுத்துகின்ற ஆன்மீக மதிப்பீடுகளை நாம் கடைப்பிடிப்பது அவசியமாகும் என நினைவூட்டப்பட்டோம். காரணம், அவை நமது வாழ்வில் ஏற்படும் மன அழுத்தத்தை விட்டும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், மற்ற மக்களுடனான நமது உறவை முன்னேற்றிக் கொள்ளவும் உதவியாக இருக்கும். மேலும், உறுதியான ஆன்மீக உணர்வும், ”தக்வா” வும் தனிநபர், குடும்பம், சமூகம் மற்றும் நாடு போன்ற பல்வேறு நிலைகளில், சன்மார்க்கத்தால் ஆர்வமூட்டப்பட்ட விஷயங்களில் ஒருவர் தன்னை முன்னேற்றிக் கொள்ளத் தூண்டும்.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

நாம் மேற்கண்ட முன்னேற்றத்தை அடைய முடிகின்ற ஒரு சூழ்நிலையில் வாழந்து வருகிறோம். பல துறைகளில் அமைதியான, நிலைத்தன்மை மிக்க முன்னேற்றத்தைப் பெற முடிகின்ற சூழ்நிலையிலும், சமுதாயத்தை முன்னேற்ற முடிகின்ற நிலையிலும், அதே சமயம், நாட்டை நிர்மாணிப்பதற்காக பங்காற்ற முடிகின்ற நிலையிலும் நாம் வாழ்ந்து

வருகிறோம். இதற்காக, நாம் அல்லாஹ்வுக்கு அதிக நன்றிக் கடன் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!) நம்மால் நமது குடும்பங்களை முன்னேற்ற முடிகின்றது; நமது சன்மார்க்கத்தை பரிபூரணமாக நிறைவேற்ற முடிகின்றது. எனினும், இதன் பொருள், நாம் எவ்வித பிரச்சனைகளையும் சவால்களையும் எதிர்கொள்ளவில்லை என்பதல்ல. இன்னும் எத்தனையோ துறைகளில் நாம் முன்னேற வேண்டியதுள்ளது என்பதையும், பல துறைகளில் நாம் தொடர்ந்து, ஒன்றுபட்டு செயல்பட வேண்டியதுள்ளது என்பதையும் மறுக்க முடியாது. அவ்வாறு செயல்பட்டால் தான் நாம் இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் இன்ஷாஅல்லாஹ் மேன்மையை அடைய முடியும்.

எனினும், மேன்மையை அடைவதற்காக முயற்சிக்கும் நாம், அடியெடுத்து வைக்கும் போது ”ஹிக்மத்” எனும் மதி நுட்பத்தின் பால் அவசியமாகின்றோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அப்போது தான், ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் பலனுள்ள, உடன்பாடான விளைவை நாம் அடைந்து விட்டோம் என்பதை உறுதி செய்ய முடியும்.

நாம் கடந்த பிரசங்கங்களில் விவாதித்தது போன்று, பிரச்சனைகளும் சவால்களும் நமது நம்பிக்கையைச் சிதைத்து விடக் கூடாது. நமது இஸ்லாமிய உணர்வைப் பலஹீனமாக்கி விடக் கூடாது. ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் வாழ்க்கையில் சிந்தனை செய்து பாருங்கள்! இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மக்காவில் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்த போதிலும், தான் பிறந்த நகரமாகிய மக்காவை விட்டும் உடனே வெளியேற அவர்கள் விரும்பவில்லை. ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மக்காவை விட்டும் புறப்படும் போது கூறிய

கருத்தை இமாம் திர்மிதி (ரஹ்) மற்றும் இமாம் இப்னு ஹிப்பான் (ரஹ்) ஆகியோர் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள்:

”மக்காவை விடச் சிறந்த நகரம் வேறு எதுவுமில்லை. மக்காவை விட வேறு எந்த நகரத்தையும் நான் அதிகமாக நேசிக்கவில்லை. எனது மக்கள் இங்கிருந்து என்னை வெளியாக்காமலிருந்தால் நான் வேறு எங்கும் சென்றிருக்க மாட்டேன்”

உண்மையில், இதுதான், மதி நுட்பம் மற்றும் விவேகத்துடன் கூடிய, தனது செயல்களால் கருணைச் சிந்தனையை வெளிப்படுத்துவதற்குத் தொடர்ந்து கடின முயற்சி செய்யும் ஒரு ”முஃமின்” (இறை நம்பிக்கையாளரின்) திடமான நம்பிக்கையாகும். இறுதியில் அப்படிப்பட்ட ”முஃமின்” இருப்பதை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்; அவரது சிந்தனைகளுக்கு மதிப்பளிப்பார்கள். உறுதியான ஆன்மீக உணர்வுடன், அல்லாஹ் மற்றும் அவனது தூதர்(ஸல்) அவர்களின் கட்டளைகளைப் புறக்கணித்து விடாமல் நாட்டின் முன்னேற்றத்திற்கும் அமைதிக்கும் தொடர்ந்து நாம் பங்காற்ற முடியும் என்பதில் நாம் நம்பிக்கையுடன் காணப்பட வேண்டும்.

மேற்கண்ட நோக்கங்களை நாம் அடைவதற்கு பின்வரும் இரு கொள்கைகள் நமக்கு உதவியாக இருக்கும். **முதலாவது மற்றும் முக்கியமான கொள்கை**, சமுதாய நலனுக்கு அதிகமான நற்காரியங்களைச் செய்வதன் மூலம் நமக்கு அருளப்பட்ட அனைத்து ”நிஃமத்” (அருட்கொடைகளுக்காக) நாம் அல்லாஹ்வுக்கு நன்றி கடனைச் செலுத்துவதாகும்.

எப்படி நன்றி செலுத்த வேண்டும் என்பதற்கு இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் அழகான ஒரு உதாரணத்தைத் தந்துள்ளார்கள்:

"ஒருவர் உண்மையான நன்றியுள்ளவர் என்பதற்கு உதாரணம் பின்வருமாறு:

ஒருவர், ஒரு அரசனிடமிருந்து ஒரு குதிரையைப் பெற்றதும், தனது தேவைகள் விஷயத்தில் அரசர் அக்கறையுடன் உள்ளார் என்பதை நினைத்து மகிழ்கிறார். அந்த அரசனிடம் மேற்கொண்டு நெருக்கமான இடத்தைப் பெற வேண்டும் என்பதற்காக, உடனடியாக அக்குதிரையை அரசனுக்குப் பணிவிடை செய்வதற்காகப் பயன்படுத்துகிறார்"

நன்றி செலுத்துவதில் இவ்விதமான மனப்பான்மை நம்மிடம் காணப்பட வேண்டும் என இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறுகிறார்கள். நாம் எவ்விதமான அருட்கொடையை அல்லாஹ்விடமிருந்து பெற்றாலும் அதைச் சேவைக்காகவும் நற்காரியத்துக்காகவும் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அன்பையும் அவனது திருப்தியையும் நாம் அடையலாம்.

உதாரணமாக, நமக்கு வழங்கப்பட்டுள்ள உடல் நலம் எனும் அருட்கொடையை வணக்க வழிபாடுகளில் ஈடுபடுதல் மற்றும் கிருபையானச் செயல்களைச் செய்வதற்காகப் பயன்படுத்தலாம். செல்வம் மற்றும் அறிவுத்திறன் எனும் அருட்கொடைகளைத் தேவைப்பட்டோருக்கு உதவுவதற்காகக் பயன்படுத்தலாம். இவற்றையெல்லாம், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மீது அக்கறை செலுத்துவான்; அவனது பார்வையில் நமது அந்தஸ்து உயரும் எனும் எதிர்பார்ப்பில் நாம் நிறைவேற்ற வேண்டும்.

**இரண்டாவது கொள்கை,** எப்போதும் நாம் சிறந்த செயலைத் தேர்ந்தெடுப்பதாகும். அச்செயல், அனைத்து அன்பு மற்றும் இரக்க சிந்தனைகளைக் கவனத்தில் கொண்டிருக்கும். குறிப்பாக, பல்வேறு சிக்கலான விஷயங்களுடன் கூடிய தற்கால சூழ்நிலையில் காணப்படும் அனைத்து விஷயங்களையும் சிந்தனையில் கொண்டிருக்கும். பொதுவாக, விளைவுகளை மிகச் சீக்கிரமாக அடைந்து விட முயற்சிப்பது மனித இயற்கை சுபாவம் ஆகும். இது அஜாக்கிரதையான பாதையின் பால் நம்மை அழைத்துச் செல்லும். எனினும், ஜமாஅத்தார்களே! வெற்றி என்பது மிக விரைவில் கிடைத்து விடும் ஒரு விஷயம் அல்ல. வெற்றியை அடைவதற்கு குறுக்கு வழியோ, எளிதான வழியோ இல்லை. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”ஃபுஸ்ஸிலத்” எனும் அத்தியாயத்தின் 34-35 வரையிலான வசனங்களில் பின்வருமாறு கூறும் கருத்துக்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும்:

وَلَا تَسْتَوِي الْحَسَنَةُ وَلَا السَّيِّئَةُ ۚ ادْفَعْ بِالَّتِي هِيَ أَحْسَنُ فَإِذَا الَّذِي
بَيْنَكَ وَبَيْنَهُ عَدَاوَةٌ كَأَنَّهُ وَلِيٌّ حَمِيمٌ (٣٤) وَمَا يُلَقَّاهَا إِلَّا الَّذِينَ
صَبَرُوا وَمَا يُلَقَّاهَا إِلَّا ذُو حَظٍّ عَظِيمٍ (٣٥)

பொருள்: நன்மையும் தீமையும் சமமாக மாட்டா, நீங்கள் (தீமையை) நன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது, யாருக்கும் உமக்கிடையே, பகைமை இருந்ததோ, அவர் உற்ற நண்பரே போல் ஆகிவிடுவார். பொறுமையாக இருந்தார்களே அவர்களைத் தவிர வேறு

யாரும் அதை அடைய மாட்டார்கள்; மேலும், மகத்தான நற்பாக்கியம் உடையவர்கள் தவிர, வேறு யாரும் அதை அடைய மாட்டார்கள்.

ஜமாஅத்தார்களே! சமுதாய வாழ்க்கைச் சூழ்நிலையில் நன்மையை அடைவதற்காக அல்லாஹ் நமக்கு வழிகாட்டி உதவி வருவதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் சமுதாயத்துக்கிடையே ஒத்துழைப்பை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அதிகமான கிருபையானச் செயல்களைச் செய்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். சிங்கப்பூரில் நமக்கு அருளப்பட்டுள்ள அமைதியான வாழ்க்கையை நமது ஆன்மீகத்தையும் ஈமானையும் மேற்கொண்டு பலப்படுத்துவதற்கு நாம் பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். இந்த அமைதியான சூழ்நிலையை, நமது ”அக்லாக்” (நற்பண்புகள்) மற்றும் தேவைப்பட்டவர்க்கு உதவுதல் போன்றவற்றின் மூலம் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் அழகை உலகோருக்கு எடுத்து இயம்புவதற்குப் பயன்படுத்த வேண்டும். நமது பிள்ளைகள் நாட்டின் மிகச் சிறந்த கல்வித் திட்டத்தில் முன்னேறுவதையும், தமது சன்மார்க்க வாழ்க்கையில் சிறந்து விளங்குவதுடன் அனைவருக்கும் அருளாக அமையும் வகையில் அவர்கள் வளர்வதையும் நாம் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறும், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு அருளியுள்ள அருட்கொடைகளுக்கு நாம் நன்றி தெரிவிக்கலாம். நாம் விரும்புவதெல்லாம் திருக்குர்ஆனின் ”ஸபா” எனும் அத்தியாயத்தின் பின்வரும் 15- வது வசனத்தில் கூறப்படும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மன்னிப்பைத் தான்:

بَلْدَةٌ طَيِّبَةٌ وَرَبٌّ غَفُورٌ ﴿١٥﴾

பொருள்: (அது மணமுள்ள) வளமான நகரம்; இன்னும் (அவன்) மன்னிப்பளிக்கும் இறைவன்”

மனிதர்களுக்கு கருணைச் சிந்தனையை வழங்கும் இறை நம்பிக்கை மற்றும் "தக்வா" வின் மூலம் நமது நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் எனும் அருட்கொடைகள் வழங்கப்படட்டுமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-அஃ்ராஃப்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 96-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَلَوْ أَنَّ أَهْلَ الْقُرَىٰٓ ءَامَنُوا۟ وَاتَّقَوْا۟ لَفَتَحْنَا عَلَيْهِم بَرَكَٰتٍ مِّنَ
السَّمَآءِ وَالْأَرْضِ وَلَٰكِن كَذَّبُوا۟ فَأَخَذْنَٰهُم بِمَا كَانُوا۟ يَكْسِبُونَ ﴿٩٦﴾

பொருள்: நிச்சயமாக அவ்வூர்வாசிகள் ஈமான் கொண்டு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்திருந்தால், நாம் அவர்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் - பரக்கத்துகளை - பாக்கியங்களைத் திறந்து விட்டிருப்போம்; ஆனால் அவர்கள் (நபிமார்களை நம்பாது) பொய்ப்பித்தனர், ஆகவே அவர்கள் செய்து கொண்டிருந்த (பாவத்)தின் காரணமாக நாம் அவர்களைப் பிடித்தோம்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.